# அன்னாள்

# தாய்க்குலத்தின்

# ஒரு நினைவுச் சின்னம்

## (1:1–2:21)

*ஸ்பார்ட்டாவின் அரசனாயிருந்த இரண்டாம் அகேஸிலாஸ் (கி.மு. 444-360), தான் மரிக்கப் போகும் வேளையில், தனக்குச் சிலை எதுவும் எழுப்பக் கூடாது என்று கட்டளையிட்டு, "மதிப்பிற்குரிய அருஞ்செயல் எதையேனும் நான் செய்திருந்தால், அதுவே எனக்கு நினைவுச் சின்ன மாகும்; ஆனால் அப்படி எதையும் நான் செய்யாதிருந்தால், நீங்கள் (எனக்காகச்) செய்யும் சிலைகள், ஏதொன்றையும் குறிப்பிடாது" என்றும் கூடக் கூறினார். இப்படிப்பட்டதே நினைவுச் சின்னங்கள் பற்றிய பொருத்தமான உணர்கருத்தாக உள்ளது—கிரானைட் கற்களால் ஏற்படுத்தப்படாதவை பெரும்பாலும் மிகச் சிறந்தவைகளாய் இருக்கின்றன! ஒருவரின் வாழ்வு பற்றிய மனப் பதிவு, வார்த்தையிலும் செயலிலும் சாதிக்கப்பட்ட நற்செயல்கள் ஆகியவையே மிகச் சிறந்த நினைவுச் சின்னமாக உள்ளது.*

*அன்னாள் என்னும் அன்பார்ந்த பெண்ணுக்குள் நாம், "தாய்க்குலத்தின் நினைவுச் சின்னமாக" உள்ள வாழ்க்கையைக் காண்கின்றோம். இவள் பல நூற்றாண்டுகளாக வேதாகம மாணவர்களால் பாராட்டப்பட்டும், "ஜெபம் நிறைந்த தாய்'' அல்லது ''தேவனின் சிறந்த தாய்'' என்ற வகையில் பட்டங்களைப் பெற்றும் இருக்கின்றாள். நீங்கள் எந்த விதமாகப் பார்த்தாலும் இவளை பரிசுத்த வசனத்தின் தேவபக்தியுள்ள பெண்களின் வரிசையில் வைத்தாக வேண்டும்.*

*வேதாகமத்தில் இருந்து நாம், அன்னாளைப் பற்றிப் பின்வரும் வரலாற்று உண்மைகளைக் கற்றுக் கொள்கின்றோம். இவள் கர்ப்பந்தரிக்க இயலாதிருந்த நான்காவது மாபெரும் பெண்ணாயிருந்தாள். தேர்ந் தெடுக்கப்பட்ட இந்த எண்ணிக்கையில் இவள் மிகவும் ஆவிக்குரியவளாக நிலை நிற்கின்றாள். சாராள் நகைத்தாள்; ரெபேக்காள் மாறுபட்ட எண்ணங் கொண்டவளாய் இருந்தாள்; இராகேல் எரிச்சலும் கோபமும் கொண்ட வளாய் இருந்தாள். நாம் அறிந்த வரையிலும், அன்னாள் மாத்திரமே ஜெபத்தின் மூலமாகத் தேவனுடைய உதவியை நாடினாள். அன்னாளின் காலத்தில் ஆண் முன்னோர்களை மட்டும் பட்டியலிடுவது வழக்க*

*மென்பதால், இவளைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பை நாம் பெற முடிவ தில்லை. நாம் 1 சாமுவேல் புத்தகத்தின் தொடக்கப் பகுதியில் (அன்னாளைப் பற்றி) காணப்படுபவற்றை மட்டும் கொண்டுள்ளோம்.*

*அன்னாள், எல்க்கானாவின் முதல் மனைவியாயிருந்தாள். இவள் மலடியாக இருந்தபடியினால், இரண்டாவதாக ஒரு பெண் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். இந்த ஏற்பாடானது தேவனுடைய தொடக்கத் திட்டங்களுடன் (ஆதி. 2:24; மல். 2:15; மத். 19:4) இசைவுள்ளதாக இருந்ததில்லை. எல்க்கானாவின் பலதாரத் திருமணத்தின் கவலைக்குரிய விளைவுகள் சாதாரணமானவைகளாக இருக்கின்றன. அன்னாள் மீது காண்பிக்கப்பட்ட விசேஷித்த அன்பைக் குறித்து பெனின்னாள் அகங்காரமும் வெறுப்பும் கொண்டவளாக ஆனாள். அவள், அன்னாளின் குறைபாட்டை, நிலையாக அவமானப்படுத்துவதற்கான ஒரு களமாக ஏற்படுத்திக் கொண்டாள். அன்னாள் இதைக் குறித்து கோபத்துடன் எதிர் பேசாமல் கொடுமைகளை சகித்துக் கொண்டாள். சீலோவில் ஒவ்வொரு ஆண்டிலும் வருடாந்திரப் பலி செலுத்துகையில் அன்னாளின் துக்கம் அதிகரிப்பதாயிருந்தது. முடிவில் அவளுடைய இந்த சுமை மிகவும் அதிகமாயிற்று. மன அழுத்தம், வெட்கக்கேடு, மற்றும் சுய குற்றச்சாட்டுதல் ஆகிய யாவையும் முன் நின்றன. பெருந்துக்கத்தினால் தாக்கப்பட்டவளாக, பலிவிருந்தை விட்டு வெளியேறி அவள் ஆசரிப்புக் கூடாரத்தில் அடைக் கலம் நாடினாள்.*

*யூதப் பாரம்பரியத்தின்படியாக, இந்தக் காலகட்டத்தில், ஆசரிப்புக் கூடாரமானது தனது மகிமையில் பெரும்பாலானவற்றை இழந்து போயிருந்தது. உடன்படிக்கைப் பெட்டியைச் சுற்றிலும் ஒரு சில திரைகள் மட்டும் தொங்க விடப்பட்டிருந்தன, மற்றும் கூடாரமானது பழுது பார்க்கப்படாத தாழ்வான ஒரு கல் மதில் சுவரால் சூழப்பட்டிருந்தது. அதன் வாசலில் பிரதான ஆசாரியரான ஏலி அமர்ந்திருந்தார். கூடாரமுற்றத் திற்குள் நுழைந்த அன்னாள் அமைதியான ஜெபத்தில் தனது ஆத்துமாவைத் தேவனிடத்தில் ஊற்றத் தொடங்கினாள். அவளைக் கவனித்த ஏலி அவள் மதுபானம் அருந்தியிருந்ததாக யூகித்தார். கடுமையான வார்த்தைகளினால் ஏலி அன்னாளைக் கடிந்து கொண்டார், ஆனால் அன்னாளோ பரிதாபமான வகையில் விளக்கம் தந்து பதில் அளித்தாள். அன்னாளின் பாரத்தைப் புரிந்து கொண்ட ஏலி, அவளுக்கு ஒரு பிள்ளை பிறப்பான் என்ற தமது ஜெப விருப்பத்தை அளித்தார். அன்னாள் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு அகன்ற பொழுது, அவள் முற்றிலும் விடுதலையான உணர்வுடன் இருந்தாள். அவள் தன் துக்கத்தின் பாரத்தைத் தேவனுடைய கரங்களில் விட்டுவிட்டாள். அவளுக்கு ஒரு மகன் தரப்படுவான் என்ற உறுதி அளிக்கப்பட்டிருந்தது, அவள் அம்மகனைத் தேவனுடைய ஊழியத்திற்கென்று அளிப்பதா யிருந்தாள்.*

*அன்னாள் எல்க்கானாவிடம் சென்று உடனடியாக இச்செய்தியை அவருடன் பகிர்ந்து கொண்டாள். அவர்கள் ஒன்றிணைந்து, பதில் தரப்பட்ட ஜெபத்தின் உறுதிப்பாட்டில் களிகூர்ந்தனர். பிள்ளை பிறந்தான், மற்றும் அவன் தேவனுடைய கடைசி நியாயாதிபதியாகவும் முதல் தீர்க்க*

*தரிசியாகவும் ஊழியத்திற்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்வதற் கென்று தனிச்சிறந்த வகையில் வடிவமைக்கப்பட்ட அன்பினால் மூன்று ஆண்டுகள் போஷிக்கப்பட்டான்.*

*மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அன்னாள் தனது இளம் பிள்ளையை விட்டுச் செல்ல ஆயத்தப்பட்டவளாக ஆண்டுப் பண்டிகைக்குத் திரும்பி வந்தாள். அவள் ஆசரிப்புக் கூடாரத்திற்குத் திரும்புகையில், மூன்று ஆண்டு களுக்கு முன்பு அங்கு தான் நின்றிருந்த இடத்திலேயே நின்றாள். விதிவச மாயிருந்த அந்நாட்களின் நினைவு அவள் சிந்தையில் பெருக்கெடுத் திருக்கும் என்பதில் ஐயமில்லை (1:26, 27).*

*அவள் சாமுவேலை ஒப்புக் கொடுக்கையில், யெகோவாவை ஆராதித்தும் துதித்தும் ஒரு பாடலை அளித்தாள். அவள் தன் இளம் பிள்ளையை அவருடைய இரக்கம் நிறைந்த கவனிப்பில் அர்ப்பணித்தாள். ஒவ்வொரு ஆண்டும் பலி செலுத்த வரும் பொழுது, அன்னாள் சாமுவேலுக் குச் சின்னச் சட்டை ஒன்றைக் கொண்டு வந்து தருவாள். அந்தச் சட்டை யின் தையல் ஒவ்வொன்றும் அன்பினால் பின்னப்பட்டிருந்தது. இதுவே தாய்க்குலத்தின் பிரம்மிக்கத்தக்க நினைவுச் சின்னத்தின் சுருக்கமான வரலாறாக உள்ளது!*

## *அன்னாளின் நினைவுச் சின்னம்*

*தாய்க்குலத்திற்கு என்றும் அழியாத நினைவுச் சின்னம் ஒன்றை எழுப்புவதற்கு, குணம் மற்றும் எண்ணப்போக்குகளின் குறிப்பிட்ட பண்பினங்கள் சில ஒன்றிணைந்துள்ளன.*

### *தேவன் மீது விசுவாசம் என்ற பண்பு*

*சந்தேகமும் பெரும் வருத்தமும் கொண்டிருந்த வேளையில் அன்னாள் தேவனிடம் திரும்பினாள் (1:9-18; 2:1-10). அவளது விசுவாசமானது தவற விடக் கூடாதபடிக்கு அவ்வளவாய் உச்சரிக்கப்பட்டது!*

*முதலாவது, அவள் தனக்கு ஒரு பிள்ளையைத் தேவன் தருவார் என்பதை நம்பியதன் மூலம் விசுவாசத்தைச் செயல்விளக்கப் படுத்தினாள். காலம் கடந்த பொழுது, அவளது துக்கமானது நிச்சயமாகவே அவளது ஆவியின் பெலத்தை இற்றுப் போகச் செய்திருக்கும். வியப்பு, ஐயப்பாடு மற்றும் அவ்வப்பொழுது ஏற்படும் நம்பிக்கை ஆகியவை நிறைந்த ஆண்டு கள் அவளது கனவுகளின் துன்புறத்தும் ஒரு சுற்றினை ஏற்படுத்தியிருந்தன. இருப்பினும், அவள் அதிகமதிகமாக தேவன் மீது சார்ந்திருப்பவளானாள். கடைசியாக, பாரத்தைச் சுமக்க இயலாத நிலையில் அவள் தேவனிடத்தில் சென்றாள். அவள் ஏலியை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பொழுது, தேவனு டைய பதிலில் அவள் திருப்தியடைந்திருந்தாள் (1:17). அன்னாள், (தனது) பாரத்தை கர்த்தர் மீது வைத்து விட்டாள். அவள் தன்னால் செய்ய இயன்ற தைச் செய்து, தனது கட்டுப்பாட்டில் இல்லாதவற்றைத் தேவனுடைய கவனிப்பில் விட்டு விட்டாள்.*

*இரண்டாவது, அவள் சாமுவேலை ஏலியிடம் கொடுத்த பொழுது*

தேவனிடத்தில் தனது விசுவாசத்தை ஒப்புக் கொடுத்தலில் செயல்விளக்கப் படுத்தினாள் (2:1-10). 1 சாமுவேல் 1:27 வசனமானது, மிக மேன்மையான நம்பிக்கையின் வார்த்தைகளைக் கொண்டுள்ளது: "இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப் பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார்." அன்னாளின் பாடல் (2:1 முதல்) ஆழமான விசுவாசத்தின் தனிச்சிறந்த எடுத்துரைப்பாக உள்ளது. இது பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் காண இயலாததும், புதிய ஏற்பாட்டில் மரியாளின் பாடலுடன் (லூக். 1:46 முதல்) மட்டும் இணையாகக் கருதப்படக் கூடியதுமான ஆவியின் மென்மையையும் ஒப்புக்கொடுத் தலின் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துகின்றது. அன்னாளின் பாடல், தேவன் ஒரு பரிசுத்தமான, பலம் உள்ள, ஞானமிக்க மற்றும் மிகமேன்மை யான நியாயாதிபதி என்பதைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

மூன்றாவது, அவள் சாமுவேலை (ஆசரிப்புக்) கூடாரத்தில் விட்டுச் சென்றதில் விசுவாசத்தைச் செயல்விளக்கப்படுத்தினாள் (1:28; 2:11). அவன் மூன்று வயதுச் சிறுவனாயிருந்தான்! அவள் பயம் கொண்டிருக்கவில்லை. அவனை அவள் தேவனுடைய கவனிப்பில் வைத்து விட்டிருந்தாள்.

அன்னாளின் விசுவாசமானது நம்மை எபிரெயர் 4:16 மற்றும் 1 பேதுரு 5:7 போன்ற வசனப் பகுதிகளுக்குள் உட்கண்ணோட்டத்தை ஆதாயப் படுத்த வல்லவர்களாக்குகிறது.

### சோதனைகளில் பொறுமை என்ற பண்பு (1:7)

அவள் எவ்வளவு காலம் மலடியாயிருந்தாள் என்று நாம் அறியவில்லை. அவள் சங்கீதம் 142:4ஆ-வின் "எனக்கு அடைக்கலமில்லாமற் போயிற்று" என்ற வார்த்தைகளை அடிக்கடி உணர்ந்திருப்பாள் என்பதில் ஐயமில்லை. அருளிரக்கம் அவளைத் தவிர மற்ற யாவருக்கும் சாதகமாயிருந்ததாகக் காணப்பட்டது. தேவன் ஒரு பெரிய தவறைச் செய்துவிட்டார் என்று அவளால் சுலபமாக நம்ப முடிந்திருக்கும். பெனின்னாளின் கொடூரமான விமர்சனங்கள் மென்மையான அன்னாளைப் புரிந்து கொள்ளுதலுக்கப்பால் துன்புறுத்தின. அவள் என்ன செய்ய வேண்டியிருந்தது? அவள் இந்தச் சோதனைகளினூடே பொறுமையாகச் சகித்துக் கொண்டிருந்தாள். நிறைவாக, இந்தப் பொறுமையானது அவள் தனது விசுவாசத்தை ஆழப் படுத்திக் கொள்ளவும் நம்பிக்கையை உயர்த்திக் கொள்ளவும் அனுமதித்தது.

### அவளது பிள்ளைகளுக்காக (தன்னை) ஒப்புக்கொடுத்தல் என்ற பண்பு (1:22; 2:19)

அவள் தன்னையே சாமுவேலுக்காக ஒப்புக்கொடுத்தாள். அவள் சிந்தனைமிக்க வகையிலும் நிலையாகவும் தாய்க்குரிய கடமைகளைச் செய்தாள். அவனுக்காக ஜெபித்தாள் மற்றும் அவனுடைய சிந்தனைகளை தேவனை நோக்கிச் செலுத்தினாள். அன்னாளைப் பொறுத்தமட்டில் தனது பிள்ளையை வளர்த்தல் என்பது தேவனுக்கு முழுமையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட ஊழியமாயிருந்தது. நவீன காலத் தாய்மார்கள் நன்கு நினைவில் கொள்ள வேண்டிய கருத்து ஒன்றை தல்மூத் குறிப்பிடுகின்றது:

*"நன்கு போதிக்கப்பட்டவன் யார்? அவன் தனது தாயினால் போதிக்கப் பட்டவனேயாவான்!" அன்னாள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டு வந்த சின்னச் சட்டையினால் அவளது ஒப்புக்கொடுத்தலானது மிகச் சிறப்பாக அடையாளப்படுத்தப்படுகின்றது. அது இணைப்புகளே இல்லாமல் ஆட்டு மயிரினால் பின்னப்பட்ட உள்ளாடையாயிருந்தது. அந்தச் சட்டைக்கு மேல் ஆசாரியர்கள் தங்கள் ஏப்போத் என்ற உடையை அணிவார்கள். சாமுவேல் ஒவ்வொரு ஆண்டிலும் தனது தாய் தனக்கு அவளது ஒப்புக்கொடுத்தலின் வியப்புமிக்க அந்த அடையாளத்தைக் கொண்டு வருவதை எதிர்பார்க்க முடிந்தது.*

***தியாகத்தின் பண்பு (1:28)***

*அவள் தனது விலைமதிப்பற்ற செல்வத்தைத் தேவனுக்குக் கையளிக்க மனம் ஒப்பினாள். அவள் தன் சுயவிருப்பத்தின்படியே தேவனுக்கு அதைச் செய்தாள். தனது பொருத்தனையில் தன்னைத் தேவனுக்கென்று புதிதாக அர்ப்பணித்தலில், அவள் தேவனுடைய மகிமையை மட்டும் நாடினாள். சாமுவேல் தனக்குச் சிறந்ததைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு அவள் தனது சுய தேவைகளை மனப்பூர்வமாக, அன்புடன் தியாகம் செய்தாள்.*

***பெற்றோர்த்துவத்தின் பண்பு (1:28)***

*அவள் தன் மகனுக்கென்று – அவன் என்றென்றைக்கும் தேவனுடைய இல்லத்தில் வாழ்வான் (1:22) என்ற – ஒரே ஒரு இலக்கை மட்டும் கொண்டிருந்தாள். அவள் தனது பிள்ளையை ஒரு முற்றான வெகுமதியாக அல்ல, ஆனால் ஒரு ஒப்படைப்பாக மட்டுமே கண்டாள். அவளது நிலைப் பாடானது தீவிரமான பொறுப்புக்களைக் கொண்டிருந்தது, மற்றும் அவள் தன் கடமையை உண்மையுடன் நிறைவேற்றியதை உறுதிப்படுத்திக் கொண்டாள். அவள் ஒரு மகனை வளர்ப்பது என்பதை மட்டுமின்றி, அவனைத் தேவனுக்கு ஒரு ஊழியக்காரனாகவும் தலைவனாகவும் கொடுத்தல் என்பதையும் தன் பொறுப்பாகக் கண்டாள்! இந்த உணர்ந் தறிதலானது இன்றைய நாட்களின் ஒவ்வொரு தாய்மாரின் சிந்தனையிலும் காணப்பட வேண்டும். ஒரு பெற்றோர் என்ற வகையில் அன்னாள் வெற்றி யடைந்தாள். அன்னாளுடைய மகன் தேவனுக்கு முன்பாக வளர்ந்தான் என்பதை அவளுடைய வரலாற்றுக் குறிப்பு உறுதிப்படுத்துகின்றது (2:21).*

## *நினைவுச் சின்னப் பாடங்கள்*

*அன்னாளின் தாயத்துவத்திலிருந்து நித்திய மதிப்பிற்குரிய பாடங்கள் கற்கப்படுகின்றன.*

*நினைவில் வையுங்கள்: ஒரு தாயின் பணிப் பொறுப்பு வலிவார்ந்ததாக உள்ளது! ஒரு தாயின் விசுவாசமானது அவளது பிள்ளைகளுக்குள் நடப் படும். அவளது விசுவாசம் பலமுள்ளதாக இருந்தால், அது முளைத்து வளரும். ஒரு தாயின் உணர்வுச் செயல்பாடுகள் அவளது பிள்ளைகளில் பிரதிபலிக்கப்படும். தாய்மார்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு*

*தேவனைப் பற்றிய உணர்வையும், ஒப்புக் கொடுத்தலில் உள்ள விசுவாசத்தையும், மற்றும் சுயநலமற்ற ஊழியத்தையும் தருகின்றீர்களா? தாய்மார்களே, சோதனை வேளைகளில் உங்கள் பிள்ளைகள் ''அம்மா'' வின் நினைவுகளில் பாதுகாப்பைக் காண்பார்களா? பிள்ளைகள் தாங்கள் காண்பவற்றைப் போலச் செய்கின்றனர். தாய்மார்கள் சாந்தம், பயபக்தி, மற்றும் நேர்த்தியான தன்மை ஆகிய பண்புகளைத் தங்கள் பிள்ளைகள் பின்பற்றிச் செய்யும்படி செயல்விளக்கப்படுத்துதல் என்பது மிகவும் இன்றியமையாததாகும்!*

*நினைவில் வையுங்கள்: தேவன் மீது ஒரு பெண் கொண்டிருக்கக் கூடிய அமைதியான விசுவாசமும், அவளிடம் என்றென்றைக்கும் இருக்கக் கூடிய சாந்த குணமும் அவளது கணவர் மற்றும் பிள்ளைகளின் வாழ்வில் இனிமையைக் கொண்டு வரும். தேவன் தங்களுக்குக் கொடுத்துள்ள பணிப்பொறுப்புக்களில் சாந்தமான வார்த்தைகளுடனும் பொறுமை மிகுந்த இரக்கத்துடனும் பணியாற்றுகின்ற தாய்மார்கள், தங்கள் "இல்லத்தை, இனிமை மிக்க இல்லமாக" ஆக்குவார்கள்!*

*நினைவில் வையுங்கள்: தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைத் தேவனுக்குகென்று போஷிக்க வேண்டும். தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்குள் தேவனுக்கென்று என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் ஒப்புக் கொடுத்தலை மனதில் செலுத்த வேண்டும். அவர்களுக்குத் தேவனைப் பற்றியும் அவரது அதிகாரம் பற்றியும் மனதில் பதியும் போதனைகளைத் தர வேண்டும். தனது பிள்ளைகளுக்கு, தேவசித்தத்திற்கு அன்றாடம் கீழ்ப்படிதலின் மகிழ்வையும் நடக்கை மற்றும் பண்பில் பரிசுத்தத்தின் வனப்பையும் காண்பிக்கின்ற தாய் பாக்கியவதியாக இருக்கின்றாள்.*

## *முடிவுரை*

*பவளப் பாறைகள் ஒருவேளை, இயற்கையின் மாபெரும் நினைவுச் சின்னங்களாக உள்ளன. அவற்றின் அழகும் விரிவும் மேற்கொள்ள இயலாதவைகளாய் உள்ளன. அவைகள், பவளங்கள் தங்கள் வாழ்நாளில் சுரக்கின்ற ஓடுகளினால் உண்டாக்கப்படுகின்றன. உண்மையில், இந்த மாபெரும் பாறைகள், அது (பவளம்) வாழ்ந்த வாழ்விற்கு நினைவுச் சின்னமாக உள்ளன. அவைகளின் இருப்பினுடைய அழிக்க இயலாத பதிவேடானது எல்லாக் காலங்களுக்கும் எதிர்ப்பாக நிலைநின்றுள்ளது. அன்னாள் போன்ற தேவபக்தியுள்ள தாயின் நினைவுச் சின்னமும் இதைப் போன்றதாகவே உள்ளது!*

*தாய்மார்களே, உங்கள் வாழ்வானது சந்தோஷம், மகிழ்ச்சி ஆகியவற்றின் நினைவுச் சின்னங்களாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தேவன் மீது அசைக்க இயலாத விசுவாசம், சோதனைகளை எதிர்கொள்ளுகையில் பொறுமை, பிறருக்கு ஒப்புக்கொடுத்தல், தியாகம் செய்தல், மற்றும் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஒருக்காலும் தவறாத உறுதிப்பாடு ஆகியவற்றை (உங்கள் பிள்ளைகளுக்குள்) நிலைநாட்டுவதில் உங்கள் சக்திகளைச் செலவிடுங்கள். தாய்மார்களே, பெற்றோர்த்து*

*வத்திற்கான உங்களின் குறிக்கோளானது, "ஆகையால், அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கென்றே ஒப்புக்கொடுக்கிறேன்" (1:28) என்று கூறிய அன்னாளுடைய குறிக்கோளாகவே இருக்கட்டும்.*